| O.S.No.06/2022 | PW1: திரு. சம்பத் த/பெ. திரு. கோவிந்ததன் | 19-09-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**1 முதல் 12, 15 முதல் 18, 20 மற்றும் 28 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1. 2–ம் பிரதிவாதியின் கையெழுத்தினை 1–ம் பிரதிவாதி மோசடியாக போட்டார் என்பதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அது என்ன ஆவணம் என்றால் 05.04.2004–ல் வட்டாட்சியர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கொடுத்த ஆவணத்தினை தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணத்தில் 2–ம் பிரதிவாதியின் கையெழுத்து மோடிசயானது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 2016–ம் ஆண்டு 2–ம் பிரதிவாதி கனகசவை பதவியிலிருந்து விலகியதாக சொல்வதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. கனகசபை விலகியதற்கு பிறகு அவர் கையெழுத்தினை மோசடியாக போடப்பட்டது என்று புகார் ஏதேனும் கொடுத்துள்ளாரா என்றால் கொடுக்கவில்லை, அவர் கொடுக்க மாட்டார். அவ்வாறு உண்மையில் நடந்திருந்தால் புகார் கொடுத்திருப்பார் என்று சொன்னால் சரியல்ல.

2. அனைத்து கணக்கு வழக்குகளையும் ஒவ்வொரு மாதமும் அனைத்து நிர்வாகிகளுக்கும் எனக்கும் காட்டினார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் லட்சுமி வாரி பைனான்ஸ் நிர்வாகிகள் மீது வட்டாட்சியர் அலுவலகத்தில் 2020–ம் ஆண்டு புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரின் அடிப்படையில் நிர்வாகிகளை அழைத்து விசாரித்தார்கள். அந்த விசாரணையில் ஸ்ரீ லட்சுமி வாரி பைனான்ஸ் சார்பாக பொதுமக்களின் டெபாசிட் எதுவும் பெறப்படவில்லை எனவும், ஏற்கனவே பெறப்பட்ட தொகைகள் வழங்கப்பட்டது எனவும் முடிவு செய்யப்பட்டு, அதற்கான நகல்கள் எனக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

3. சுமாராக ஸ்ரீ லட்சுமி வாரி பைனான்ஸின் வாராக்கடன் ரூ.70,00,000/- இருக்கும். அவ்வாறு வாராக்கடன் இருக்கும்போது நிர்வாகிள் அழைத்தபோது நான் செல்லவில்லை என்று சொன்னால் சென்றுள்ளேன். 4-ம் பிரதிவாதி ரூ.1,00,000/- நிரந்தர வைப்பீடு செய்ததாகவும், அந்த தொகை வட்டியுடன் திருப்பி கொடுக்கப்பட்ட விஷயத்தினை நோட்டினை பார்த்து நான் சொல்லவில்லை. கனகசபை சொன்ன தகவலின் பேரில்தான் 4-ம் பிரதிவாதிக்கு கொடுத்த பணம் பற்றி சொல்லியுள்ளேன். அது சம்மந்தமாக நானே எந்த தகவலும் தாவாவில் சொல்லவில்லை.

4. ரூ.1,00,000/- த்தினை கணக்கினை சரிபார்த்து கொடுக்கப்பட்டதா என்றால் கணக்கு சரிபார்க்காமலேயே அசல் வட்டியுடன் கொடுக்கப்பட்டது. அவ்வாறு கணக்குகள் சரிபார்க்காமல் 4-ம் பிரதிவாதிக்கு வட்டியுடன் கொடுக்கப்பட்டிருந்தால் மற்ற பங்குதாரர்கள் பிரச்சனை செய்திருப்பார்கள் என்று சொன்னால் பிரச்சனை செய்தார்கள். அவ்வாறு மற்ற பங்குதாரர்கள் பிரச்சனை செய்திருந்தால் எப்போதோ நிதி நிறுவனம் கலைக்கப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. 2-ம் பிரதிவாதி உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் விலகிவிட்டார் என்று சொன்னால் இல்லை, அவர் விருப்பப்பட்டு விலகிவிட்டார். எனது தாவாவில் 2015-ம் ஆண்டு நடந்த சம்பவத்திற்கு 2020-ம் ஆண்டுதான் கேள்வி எழுப்பியதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரியாக தெரியவில்லை. உண்மையிலேயே நான் சொல்வதுபோல் சம்பவம் நடந்திருந்தால் 2015-ம் ஆண்டிலேயே கேள்வி எழுப்பியிருப்பேன் என்றாலும், நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5. 03.08.2020 தேதியன்று நடைபெற்ற கூட்டத்தில் என்னையும், 2 மற்றும் 6-ம் பிரதிவாதியையும் 4-ம் பிரதிவாதியிடமிருந்து ரூ.21,200/-ஐ வசூலிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டதாக நான் என்னுடைய தாவாவில் கூறியுள்ளதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை, அவர்களும் தரவில்லை. நான் சொன்னவாறு எந்தவொரு தீர்மானமும் அன்றைய தினம் நிறைவேற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எனது தாவாவில் ரூ.1,00,000/- சிட்டா புத்தகத்தில் குறைவாக உள்ளதை 1-ம் பிரதிவாதிதான் தரவேண்டும் என்று சொல்லியுள்ள விவரம் தவறு என்று சொன்னால் சரியல்ல. எனது தாவாவின்படி ரூ.1,31,700/- அதிகப்படியாகத்தான் என்று கூறியுள்ளேன். எனது தாவாவில் ரூ.1,00,000/- குறைவாக உள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல.

6. வரவு செலவு கணக்குகளை சரிபார்ப்பதற்காக திரு. மயில்ராவணன் என்பவரை நிர்வாகத்தினர் நியமித்தார்கள் என்றால் சரிதான். மயில்ராவணன் கொடுத்த அறிவிக்கையில் சுமார் 59 இடங்களில் பண மதிப்பில் சிறு சிறு வேறுபாடுகள் உள்ளது என்று சொல்லியுள்ளார். அவ்வாறு அவர் சொல்லவில்லை என்றாலும், சிறு சிறு பிழைகள் உள்ளதாகத்தான் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. அந்த பிழைகள் அப்போரே சரிசெய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த சம்பம் 2017-ம் ஆண்டு நடைபெற்றது. ஆய்வு செய்த மயில்ராவணன் எந்த கட்டணமும் கோரவில்லை என்றால் சரியல்ல, அவர் கோரினார், கொடுக்க மறுத்துவிட்டார்கள். நான் எனது தாவாவில் பாரா 15, 16-ல் சொல்லியுள்ள விஷயங்களுக்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 3-ம் பிரதிவாதிக்கு நற்பெயருக்கு கலங்கம் ஏற்படுத்தும் விதமாக மேற்படி சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

7. நான் சொல்வதுபோல் குறை இருந்திருந்தால் ஒவ்வொரு மாதமும் பங்குதாரர்கள் கேள்வி எழுப்பியிருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் நிர்வாகத்தில் பேசுவது மட்டுமல்லாமல் பொது இடங்களிலும் ஸ்ரீ லட்சுமி வாரி பைனான்ஸினை பற்றி தவறுதலாக சொல்வது எனது வழக்கம் என்று சொன்னால் சரியல்ல. இதனை கேள்விப்பட்ட நிர்வாகிகள் ஏன் என்னை ஸ்ரீ லட்சுமி வாரி பைனான்ஸ் நிறுவனத்திலிருந்து நீக்கக்கூடாது என அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த கடிதத்திற்கு நான் பதில் எதுவும் கொடுக்கவில்லை என்றால் கொடுத்துள்ளேன். நான் அவ்வாறு கடிதம் அனுப்பவில்லை என்றாலும், நான் கடிதம் அனுப்பியதாக சொல்லும் விஷயத்தை நான்தான் நிரூபிக்க வேண்டும் என்றாலும் சரியல்ல.

8. மீண்டும், 30.10.2020 தேதியிட்டு 1-ம் பிரதிவாதி எனக்கு ஒரு கடிதம் அனுப்பினார் என்றாலும், அந்த கடிதத்தில் நான் ஏற்கனவே அனுப்பிய கடிதத்திற்கு பதில் எதுவும் சமர்ப்பிக்காததால் மீண்டும் 30.11.2020 க்குள் பதில் அறிவிப்பு கொடுக்க வேண்டும் என்று மீண்டும் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதற்கு நான் பதில் அறிவிப்பு கொடுத்தேன். 12.01.2021-ல் நடந்த கூட்டத்தின் மூலம் எனக்கு உடல், உயிருக்கு மிரட்டல் இருப்பதாக சொல்லியுள்ளேன். ஆனால் எனது வழக்கில் மேற்படி தேதியை குறிப்பிடவில்லை. மேற்படி மிரட்டல் குறித்து புகார் கொடுத்துள்ளீர்களா என்றால் மாவட்ட கண்காணிப்பாளருக்கு புகார் கொடுத்தேன். 12.01.2021 தேதியிட்டு புகார் கொடுத்தாக எந்த ஆவணமும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஞாபகமில்லை. நான் அவ்வாறு புகார் கொடுக்கவில்லை என்றாலும், நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல.

9. மீண்டும் நான் 13.07.2021-ல் கணக்கினை சரிவர தாக்கல் செய்ய வேண்டும் என்று அறிவிப்பு அனுப்பினேன். அதற்கு பதில் தாக்கல் செய்யவில்லை. அதன்பிறகு என்னை நிர்வாகத்திலிருந்து நீக்கியதாக தீர்மானம் நிறைவேற்றி தபால் வந்தது. மேற்படி தீர்மானம் நிறைவேற்றியபோது நானும் கலந்துகொண்டேன், அங்கு என்னை பயமுறுத்தி அனுப்பினார்கள். மேற்படி சங்கதிகளை நான் எனது தாவாவில் சொல்லவில்லை என்றால் தற்போது ஞாபகமில்லை. நான் அந்த கூட்டத்திற்கு செல்லவில்லை என்றாலும், அதனால் நீக்கப்பட்ட தகவலை தபால் மூலம் அனுப்பினார்கள் என்றால் சரியல்ல.

10. நான் நீக்கப்பட்டதற்கு பிறகு எனக்கு கொடுக்க வேண்டிய தொகையினை கொடுப்பதற்கு வங்கி விவரங்களை கேட்டார்கள் என்று சொன்னால் அவர்கள் கேட்பதற்கு முன்பு நானே கொடுத்துவிட்டேன். 18.07.2021 தேதியன்று சரியாக கணக்கு பார்க்கப்பட்டு எனக்கு சேரவேண்டிய தொகை ரூ.2,75,950/- எனது வங்கி கணக்கில் செலுத்தப்பட்டது என்று சொன்னால் அந்த தொகை சரிவர கணக்கு பார்க்காமல் தோரயமாக செலுத்தப்பட்டது. மேற்படி தொகை தோரயமாக செலுத்தப்பட்டது என்று வக்கீல் அறிவிப்பு ஏதேனும் அனுப்பினீர்களா என்றால் நானே கடிதம் அனுப்பினேன். அதற்கான கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

11. நான் நிர்வாக குழுவிலிருந்து நீக்கப்பட்டதற்கு யாரும் ஆட்சேபணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, ஒரு சிலர் செய்தனர், ஒரு சிலர் செய்யவில்லை. 1 முதல் 4 பிரதிவாதிகள் மீது செய்யாறு காவல் நிலையத்தில் 19.09.2021 தேதியன்று கொடுத்த புகார் சம்மந்தமாக யாரையும் அழைத்து விசாரணை செய்யவில்லை என்று

சொன்னால் சரிதான். நான் தாவாவில் சொல்லியுள்ளதுபோல் சம்பவம் நடத்திருந்தால் போலீசார் அழைத்து விசாரித்திருப்பார்கள் என்றாலும், அவ்வாறான சம்பவம்எதுவும் நடக்காததால் விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தனிப்பட்ட நோக்கத்திற்காக இத்தாவாவினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஸ்ரீ லட்சுமி வாரி பைனான்ஸ் வரி ஏய்ப்பு செய்ததாக சொல்வதற்கு ஆதாரங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். தற்போது வரை ஒவ்வொரு ஆண்டும் முறையாக தணிக்கை செய்யப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் ஒவ்வொரு ஆண்டும் பங்குதாரர்களுக்கு இலாபம் பிரிக்கப்பட்டு முறையாக பணம் செலுத்தப்பட்டு வருகிறது என்று சொன்னால் தோரயமாகத்தான் கொடுக்கப்பட்டு வருகிறது.

12. மீண்டும் திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காளிப்பாளரிடம் புகார் கொடுத்தேன் என்றால் நான் சென்னைக்கு அனுப்பிய புகாரினை மாவட்ட கண்காணிப்பாளருக்க அனுப்பி வைத்தார்கள். அந்த புகாரின் அடிப்படையில் என்னையும், நிர்வாகிகளையும் அழைத்து விசாரித்தார்கள். அந்த விசாரணையில் எந்த தவறும் நடைபெறவில்லை என்று புகார் முடித்துவைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சங்கதிகளை என் தாவாவில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் குறிப்பிட்டுள்ளேன்.

13. எதன் அடிப்படையில் ஸ்ரீ லட்சுமி வாரி பைனான்ஸ் நிறுவனம் எனக்கு ரூ.11,03,800/- தரவேண்டும் என்பதற்கு எதன் அடிப்படையில் கணக்கிடப்பட்டது என்று என் தாவாவில் சொல்லவில்லை என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி தொகையினை நான்

தோரயமாகத்தான் போட்டுள்ளேன் என்று சொன்னால் இருக்கலாம். நான் தோரயாகாக எந்த தொகையையும் வசூல் செய்வதற்கு வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் தாவாவில் சொல்லியுள்ள சங்கதிகளுக்கு வியாஜ்ஜியமூலம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தாவாவில் எனக்கு கொடுக்க வேண்டிய பணத்தை பற்றி கூறாமல் தேவையில்லாத சங்கதிகளை கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

14. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்களும், வா.சா.ஆ.12, வா.சா.ஆ.14, வா.சா.ஆ.16 முதல் வா.சா.ஆ.30 வரையிலான ஆவணங்கள் நான் ஸ்ரீ லட்சுமி வாரி பைனான்ஸ் நிறுவனத்தில் நிர்வாக உறுப்பினராக இருந்தபோதே ஏற்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரிதான். மற்ற ஆவணங்கள் தாவா செய்யப்பட்டதற்கு பிறகு ஏற்பட்ட ஆவணங்கள் என்றால் இருக்கலாம். தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு 2022-ம் ஆண்டு மீண்டும் செய்யாறு காவல் நிலையத்தில் பிரதிவாதிகள் மீது நடவடிக்கை எடுக்க நீதிமன்றத்தில் தனி புகார் கொடுத்தேன், அந்த நீதிமன்றத்தில் என்னை விசாரித்தார்கள்.

15. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் என்னால் மோசடியாக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு செலுத்த வேண்டிய தொகையினை பிரதிவாதிகள் முறையாக செலுத்திவிட்டார்கள் என்றாலும், அதனால் என்னுடைய வழக்கு ஏற்கத்தக்க வழக்கு என்று சொன்னால் சரியல்ல. அதனால் என் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.09.19 12:54:39 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**